





வாழையடி வாழையென வந்த
திருக்கூட்டத்தாரை அடியொற்றிப்
பிறந்து வளர்ந்த
கிளிநொச்சிக்

# குருகுலம்



செயற்பாடும்
கணக்கறிக்கைகளும்
1983, 1984, 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சிச் சைவ வித்தியா விருத்திச் சங்கம்
# கிளிநொச்சி.

பதிவு 579 /17-3-1954 தர்மச்சங்கப் பதிவு14763 / 15-5-67

" உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ "

" வீஞள் படாமை நன்ருற்றின் அ∴தொருவன்
வாஞள் வழியடைக்குங் கல் " ( வள்ளுவர் )

" வயிற்றுக்குச் சோறிடவேண்டும்
இங்குவாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பலகல்விதந்தே இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும் " ( பாரதி )

" ஜீவசேவையே சிவசேவை "

**இவ் வெளியீடு குருகுலத்தின் உண்மைநிலையைக் காட்டுவது.**

இதன் மூலம் குருகுலத்தின் வளத்தைப்பெருக்க விரும்பி
உள்நாட்டு வள்ளல்களுக்கும் அறிஞர்களுக்கும்
வெளிநாட்டு உதவுநிறுவனங்களுக்கும்,
வெளிநாட்டு இலங்கையர்களுக்கும்
சமர்ப்பிக்கின்ருேம்.

இதுவரை அன்பளிப்புச் செய்த யாவருக்கும்
எம் அன்புகனிந்த நன்றிகள்.

" நிதி நீண்டு நீதியாகுக "

குருகுல நிருவாகிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்குமிச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லுவேன் இறைவா கச்சியேகம்பனே"

— பட்டினத்தடிகள்

பிறக்கும் பொழுது கொண்டுவரவில்லை. இறக்கும் பொழுது யாரும் எதுவும் கொண்டுபோவதில்லை. கிடைக்கும் சொத்துக்கள் எல்லாம் இடையில் சிவபெருமான் எமக்குத்தந்தவைகள். அப்படியிருக்க வறியவர்க்குக் கொடாது இறப்பது எவ்வளவு அறியாமை.

## விசேட கவனிப்பு.

பல்வேறு சிரமங்களுக்குட்பட்டே இவ்விதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கஷ்டமான காலத்தில் எமது குருகுலத்தின் குறிக்கோளையும் எதிர்கால நடபடிக்கைகளையும், கணக்கறிக்கைகளையும், வேண்டுகோள்களையும் சேர்த்துப் படங்களுடன் பதிப்பித்தோம். நீண்ட அறிக்கையாதலின் பலருக்கு வாசிக்க நேரமின்றித் தவிர்க்கப்படலாம். தயவுசெய்து பெருநன்மையைக் கருதி இம்மலரை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கட்டாயம் வாசித்துக் கருத்துக்களைப் பற்றிய அபிப்பிராயங்களைத் தெளிவுபடுத்தும்படி மிகவும் தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

நேரில் வந்து இந்த நிறுவனத்தைப் பார்வையிட்டால் இன்னும் நன்கு புரிந்துகொண்டு உதவ முன்வருவீர்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இலங்கையிலே புதிதாக 1984ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திலே "குருகுலம்" ஆற்றி வரும் சேவை அளப்பரியது. மிகவும் பின் தங்கிய, அபிவிருத்தியை நாடிநிற்கும் இம்மாவட்டத்திலே அரசாங்கச் சார்பற்ற நிறுவனமாக மக்கள் சேவையே மகத்தான சேவையென மனதிற் கொண்டு இந்த நிலையம் சேவையாற்றி வருகின்றது.

அடர்ந்த காடாக வனவிலங்குகள் குடிகொண்டிருந்த நிலத்தில் ஐம்பது ஏக்கரை கழனியாக்கி நெல்வயலாகவும், தென்னை, மா, பலாத்தோப்பாகவும் மாற்றி அமைத்துள்ளது. 1964ம் ஆண்டு தொடக்கம் வறிய குழந்தைகளின் உணவு, உடை, கல்வி ஆகியவற்றில் அரும்பணியாற்றி வருகிறது.

தமது பெற்றோரை இழந்த குழந்தைகளை ஒழுக்க சீலர்களாக நன்னெறிப்படுத்தி அறிவொளியூட்டிப் பலரைப் பதவிகளில் கூட ஏற்றிவைத்துள்ளது.

500 க்கு அதிகமான இளம் பெண்களுக்கு பாலர் பாடசாலை ஆசிரிய பயிற்சி அளித்து அவர்களைப் பல்வேறுபகுதிகளில் சேவையாற்ற வழிகோலியுள்ளது. மேலும் தொழில் ரீதியாக விவசாயம், தச்சுவேலை, மேசன்வேலை போன்ற தொழிற்பயிற்சிகளை அளித்து பல பயிற்றப்பட்ட தொழிலாளர்களை உருவாக்கியுள்ளது.

சூறாவளி, பெருவெள்ளம், இனக்கலவரம் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புகலிடம் அளித்து நிவாரண உதவிகள் அளித்துள்ளது. இந்து போதகர்களுக்கான ஐந்தாண்டுப் பயிற்சித்திட்டம் ஒன்றை ஏற்படுத்தி முதற்பயிற்சி பூர்த்தியடைந்து விட்டது.

இப்படியான மகத்தான சேவையாற்றும் மன்றத்துக்கு அரசும் அரசுசார்பற்ற நிறுவனங்களும் தம்மாலான முழு ஒத்துழைப்பையும் நல்குவார்களாயின் "குருகுலம்" தனது சேவையை மேலும் பன்முகப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

வாழ்க குருகுலம்! வளர்க நின் தொண்டு!

அ. ஜெ. செந்தில்நாதன்,
கிளிநொச்சி மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

கிளிநொச்சி.
21-11-86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருமசபை 1984 — 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமசபை உறுப்பினர் 1984 1985

தலைவர்:- திரு. க. குமாரசாமி — அவர்கள் நீர்ப்பாசனப் பிரதம பொறியியலாளர் கிளிநொச்சி.

உபதலைவர் திரு. கா. நாகலிங்கம் அவர்கள் அதிபர், உருத்திரபுரம் மகாவித்தியாலயம்.

காரியதரிசி:- திரு. செ. நடராசா அவர்கள் ஆசிரியர், ஜெயந்திநகர்.*

உப காரியதரிசி:- திரு. சி. கதிரவேலு அவர்கள் எழுதுவினைஞர் குருகுலம் கிளிநொச்சி.

தனாதிகாரி:- திரு. ப. கணேசபிள்ளை அவர்கள் 7ம் வய்க்கால் கிளிநொச்சி.*

கி. செயலாளர்:- திரு வே. கதிரவேலு அவர்கள் இளைப்பாறிய அதிபர், குருகுலம்.*

திருவாக உறுப்பினர்:-

திரு. க. திருலோகமூர்த்தி அவர்கள் ஆயுர்வேத டாக்டர் கிளிநொச்சி.
,, இரா. சின்னத்தம்பி ,, கொத்தணி மத்திய மகாவித்தியாலயம் அதிபர், கிளிநொச்சி.
,, க. கா. சோமசுந்தரம் ,, இளைப்பாறிய சுகாதார-பரிசோதகர் சிவசக்தி, கிளிநொச்சி.
,, செ.சு. சிவதாசன் ,, கனகபுரம், கிளிநொச்சி.
,, அ. தாமோதரம்பிள்ளை ,, விஷவைத்தியர், திருநகர்.
,, வே. பாலசுந்தரம் ,, ஆசிரியர், குஞ்சுப்பரந்தன்.
திருமதி மங்கையர்க்கரசி இரத்தினசாமி உதயநகர்.
செல்வி சி. விசாலாட்சி புலவர் ,, ஆசிரியை, குருகுலம்.
செல்வி பா. வேலுப்பிள்ளை ,, ஆசிரியை, குருகுலம்.
திருமதி பூரணம் நடராசா ,, ஜெயந்திநகர்.
திரு ந. கோபாலநாதன் ,, இரத்தினபுரம்.
,, அ. பத்மநாதன் ,, அதிபர், பரந்தன் கனிஷ்ட மகா வித்தியாலயம்.
,, க. சி. ஆறுமுகம் ,, குமரபுரம், பரந்தன்.
,, நா. கணபதிப்பிள்ளை ,, இளைப்பாறிய தொழில் வழிகட்டி தருமபுரம்
,, இ. நடராசா ,, கணேசபுரம், கிளிநொச்சி.
,, பொ. யோகேந்திரன் ,, விசேடசேவை, உத்தியோகத்தர்.
,, ஆ. மாரிமுத்து ,, இராமநாதபுரம்.
,, பொன். நித்தியானந்தன் ,, சமூகசேவை உத்தியோகத்தர், கச்சேரி, கிளிநொச்சி.
,, ப. வை. ஜெயபாலன் ,, முரசுமோட்டை.
,, து. தர்மானந்தசிவம் ,, ஆசிரியர். உருத்திரபுரம் கிழக்கு.
,, வை. வைத்தீஸ்வரமூர்த்தி ,, கிராமசேவையாளர், உருத்திரபுரம்.
,, சி. விக்கினராசா ,, பாவிப்பாஞ்சான், கிளிநொச்சி.*

* இவ்வடையாளமிடப்பட்டோர் நம்பிக்கைப் பொறுப்பாளரும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதமணி, இலக்கிய கலாநிதி, தவத்திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதி உதவியது.**

# குருகுலக் குறிக்கோள்.

**நிதிநீண்டு நீதியாகுக.**

"அற்றார் அழுபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"



கடவுள் பொருளைத் தருகின்றார். பொருளைப் பெற்றவன் அப்பொருள் இருமைக்கும் பயன்படும்படி அப்பொருளைச் சேமித்து வைக்கும் சேமவங்கி வறியவர்களின் வயிறுகளேயாம். இது வள்ளுவர் கருத்து. அற்றார் - வாழவழிவகையில்லாதவர். வறியவர். **அழிபசி அறிவையழிக்கும் பசி.** பசிவிரைந்து நீங்கற்பாலது. உடற்பசி நீக்கம் உயிர்ப்பசிக்கு ஆக்கமாதல்வேண்டும். அஃதாவது, உடற்பசி நீக்கம் உயிர்ப்பசியை உண்டாக்கவேண்டும். உயிர்ப்பசியாவது அறிவுப்பசி. அறிவுப்பசியைச் **சாந்தி செய்வது நீதி.** நீதி திருவருளின் வடிவம். நீதியாகிய திருவருளே இந்த உலகத்தை நடத்துகின்றது. ஏன் இந்த உலகம் இப்படி இருக்கின்றதென்றால், அப்படி இருப்பதுதான்நீதி. அதனை அறிய அல்லும் பகலும் முயலவேண்டும்.

நமக்குவரும் இன்பதுன்ப அனுபவங்கள் **திருவருள்நீதி** நமக்கு அருளியவை. துன்ப அனுபவம் நம்மைத்திருத்தவந்த நல்ல பாடம். இந்தப் பாடபரீட்சையிற் சித்தி பெறவேண்டும். **துன்ப அனுபவம் திருவருட் பிரசாதம்.** பிரசாதத்தை வெறுக்கலாமா? குருகுல வளாகத்துக்கு வரும் நிதி அத்தனையும், திருவருள் நீதியிற் சென்று முற்றுவதற்குக் குருகுலம் வழிகாட்டியாய் அமையவேண்டும். நீதிவிசாரக் கருத்தரங்கு சதாநிகழ்ந்து கொண்டிருக்கவேண்டும். நிதி நீண்டு நீதியைத் தொடுமாயின், குருகுலவாசிகள் நிதி வழங்குவோரை இம்மை, வறுமை, வீடுபேறு மூன்றுக்கும் பாத்திரமாக்கும் பக்குவர் ஆவார்கள். நிதிபெருகி நீதியாகுக என்று கிளிநொச்சிக் குருகுலத்தை முன்னிட்டுத் திருவருள் நீதியைப் பிரார்த்திப்போமாக.

கலாசாலைவீதி,
திருநெல்வேலி. 25-3-73.

(ஒப்பம்) சி. கணபதிப்பிள்ளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு. சுந்தானந்தபாரதி அவர்கள்
## குருகுலத்துக்கு வந்து பார்வையிட்டபின் பாடிய
## குருகுல கீதம்.

மகாதேவ சம்போ-ஜய ஜய
மகாதேவ சம்போ-என்போம் — (மகா)

பச்சைத் திருவளர் சோலை
பரமன் குருகுலசாலை
உச்சக்கலை தரு நிலையம்
உழைப்பால் வளம் பெற விளையும் — (மகா)


தாய்தரும் அமுத சுரபி
தண்ணருள் அன்பின் அருவி
வாய்மையும் தூய்மையும் வாழும்
மாசறு மாதவச் சூழல் — (மகா)

வாழ்வினில் உள்ளது சமயம்
மனப்பான்மை யினால் அமையும்
ஆழ்ந்த கருத்துறு காவியம்
அழகு மணக்கும் ஓவியம் — (மகா)

பாருலக காலயந் தனிலே
பணிசெயுந் துறவே இனிதே
ஒருலகில் ஒரு குலமாய்
ஒருமையில் வாழ்வது நலமே. -- (மகா)


(ஒப்பம்) சுந்தானந்தபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கட்டப்பட விருக்கும் சர்வசக்திபீடம் - மேருபீடம்
(அத்திவாரமிடப்பட்டுள்ளது.)

இப்பீடத்தைக் கட்டிமுடிக்கத் தங்களாலியன்ற உதவிகள் செய்தல் சைவமக்கள் யாவரினதும் முக்கிய கடமையல்லவா?



காவாய் ஆதீனமகா சந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி அவர்கள் மகாலிங்கத்துக்கும், அம்பாளுக்கும் அபிஷேகிக்கின்றார் தமது கையால்.


காசி விசுவநாதருக்கு எல்லாரும் அபீஷேகம் செய்யும் முறைபோல் நமது சர்வசக்தி பீடத்தில் எழுந்தருளியிருக்கும் சர்வவல்லவாம்பிகைசமேத பரிபூரணனந்தருக்கும் ஆசாரமுள்ள யாவரும் அபிஷேகிக்கும் முறையை முன்னைக்கு முகமாக முதல் முதலில் சுவாமிகள் முன்னேடியாக அபிசேகிக்கின்றார்கள்



தற்காலிக சர்வசக்தி பீடத்திருவுருவம்.

ஸ்ரீ சர்வவல்லவாம்பிகை சமேத பரிபூரணனந்தர் லிங்கவடிவுள மர அவரைச்சுற்றிச் சித்தி விநாயகர் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் வயிரவர். அதே ஆவிடையாருள் உச்சியிலும் சிவலிங்கம். பீடஅமைப்பும் சிவலிங்கமாய்க் காட்சியளிக்கின்றது.
மேரு பீடம் - சிவலிங்கக் கொலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1980 — 85 இந்து போதகர் பயிற்சி மாணவர்-



1985 இந்து போதகர் பயிற்சியாளர்



அமெரிக்க ஸ்ரீசுப்பிரமுனிய சுவாமிகளின் ஆசிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவத்திரு. வடிவேல்சுவாமி அவர்கள்
## எழுதி உதவியது

மகாதேவ ஆசிரமம்,
ஜெயந்திநகர்,
15-3-73.



அன்புமயமான, ஆழமான நல்வாழ்வை வகுத்துக்கொடுப்பது குருகுலம். இம்மைமறுமை இலட்சியத்தை போதிப்பது குருகுலம். பண்டைக் காலத்து ரிஷிகளால் ஆக்கப்பட்டு நமது முன்னோர்கள் பரம்பரையாய் வந்தது குருகுலம். அக்காலத்துக் குருகுலவாசத்தின் நற்பயனும் சட்ட திட்டங்களும் தான் இன்னும் சிறிதளவேனும் மக்களுக்குப் பயன்கொடுக்கிறது. முற்றாக மறைந்து பட்டுப்போகாமல் தெய்வீக சக்தியால் ஒருவரைக் கருவியாகவைத்து இந்தக் குருகுலம் உதயமாகி இருக்கிறது.

'இளமையிற்கல்' என்றபடி உயர்வு தாழ்வின்றி, சாதிசமய பேதமின்றிச் சிறுவயதிலிருந்தே குருகுல வாசம், குருகுலப்படிப்பு, தொழில், ஒழுக்கம் ஆகியன அமைய ஒருவர் இருவராக இருவர் இன்னும் பலராகவும் ஆனால் தனிமனிதரிலிருந்து சமூகம்வரையிலும் அதிலிருந்து நாடு, தேசம் வரையும பரிணமித்து ஒரு பரமதிருப்தியான நிலையை அடையலாம் இக்குருகுல வாசத்தால், இதனால் நாட்டில் தீமைகள் அணுகா, எனவே இக் குருகுல விருத்திக்குப் போதிய மிகப்பெரியபல விதமான தர்ம கைங்கரியங்கள் - உதவிகள் வேண்டப்படுகின்றன. குருகுல வளர்ச்சியில் மக்கள் வளர்ச்சி, நாட்டுவளர்ச்சி எல்லாம் அடக்கம் உடலுக்கு உணவு; உயிருக்குக்கல்வி; ஞானத்திற்குச் சமயம் இன்னும் பிறவும் இக்குருகுலத்தின்நோக்கம்.

இந்தக்குருகுலம் ஓர் கற்பகவிருட்சமாய் நிலைத்திருந்து நிலையானதை மக்களுக்குக் கொடுத்து உதவுவதாக. அறியாமையாகிய இருளில் இருப்பவர்களுக்கு நல்லொளி காட்டுவதாக. என்றென்றும் பிரகாசிப்பதாக.

(ஒப்பம்) வடிவேல்சுவாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகுலத்தின்
## உள்ளடக்கம்

"எனது திட்டங்கள் யாவும் சிற்றாறுகளுக்குச் சமமாயின் அவ்வாறுகள் யாவும் ஒன்றிணைந்து சங்கமமாகும் எல்லையற்ற சமுத்திரமே ஆதாரக்கல்வி" என்றார் காந்திஜீ அவர்கள். இக்கருத்தைச் சூசகமாகக் கொண்டதாதலின் ஆதாரக்கல்விக் குருகுலம் என அழைக்கப்படுகின்றது.

சமுதாய அமைப்பிலுள்ள எல்லா நிலையினர்க்கும் ஆண் பெண் என்ற பேதமின்றி யாவரும் வளர்ந்து ஆதிகால ரிஷிகளின் கட்டுக்கோப்பின் அடிப்படையில் தற்காலத்துக்காய மாற்றங்களுடன் செயற்படுவது குருகுலம்.

சமூக, சமயக் கருத்துக்களைத் தார்மீக ஆத்மீக அடிப்படையில் இணையச்செய்து சமூகத்தின் சகல நிலையினரும் வாழும் சர்வதேச நிறுவனமாக விரிவடைய விரும்புவது இக்குருகுலம். இந்தியாவிலுள்ள காந்திநிகேதனம், காந்திக்கிராமம், வாலஜாபாத் இந்துமதபாடசாலை, அரவிந்தாச்சிரமம், தயாள்பாக் என்ற நிறுவனங்களின் அமைப்பையண்டி இந்து சமய வாழ்வு நெறிக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர நினைப்பது இக்குருகுலம்.

தன்னம்பிக்கை, உடலுழைப்பு, எளிமை வாழ்வு, நோய்நீக்கம், சுயதேவைப் பூர்த்தி, இந்து மத தத்துவங்களை வாழ்விற் புகுத்தல் முதலாய இக்காலத்துக் கமைந்த அத்தியாவசியமான கருவூலங்களை வளர்க்க விரும்புவது இக் குருகுலம்.

சமூகத்திடையே தத்துவ ரீதியிலமைந்த உயர்ந்த அறிவை வளர்த்துத் தற்காலத்தில் வளர்ந்துள்ள குருட்டு நம்பிக்கைகளைக் களைய முயல்வது இக்குருகுலச் செயற்பாடு,

இதற்காகக் கருத்தரங்குகளை நடாத்துதல், கல்வியறிவுப் போட்டிகளை வளர்த்து இளைஞர்களிடையே கருத்து மாற்றம் செய்தல், கிராமங்களை மதிப்பீடுசெய்து திட்டமிட்டு அவ்வக் கிராமங்களுக்கேற்ற இணைந்த திட்டங்களை உருவாக்குதல், நாடகம் கலைவிழாக்களை உருவாக்குதல், கலைநிகழ்ச்சிகளை ஏற்படுத்துதல் முதலியன மூலம் சமுதாயத்தின் பலநிலையினரும் ஈடுபடச் செய்தல் குருகுல செயற்திட்டம். இதற்கு முதலில் கிளிநொச்சி மாவட்டத்தை எடுத்துக்கொண்டும், பின் ஏனைய மாவட்டங்களிலும் பரப்புதல் இதன் செயற்பாடு.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்தே இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாரதியின் கருத்தை வளர்த்தல் இக் குருகுல வாழ்வு,


குழந்தைக் கல்வி பாலர் கல்வி ஆரம்பக் கல்வி இளைஞர், வாலிபர், கல்வி, இந்துகலாச் சாரக் கல்வி, என்ற வகையில் ஆத்மீக ஒழுக் கத்தை இணைத்துக் கிராமங்கள் தோறும் பரப்ப முயல்வதுடன் எல்லா மாவட்டங்களி லும் குருகுலக் கிளைகளை நிறுவ முயலும்.

மேலுள்ள கருத்துக்களைச் செயற்படுத்த இந்து போதக பயிற்சியாளரையும் சமூக ஊழியர்களையும், பாலர் ஆசிரியர்களையும் விசேட பயிற்சி பெறச் செய்யும், பயிற்சி நெறிகளைக் குருகுலத்தில் ஆக்கி இலங்கையின் பல பாகங்களிலும் அவர்களை நியமித்து ஆவன செய்ய முயல்வது இக் குருகுலம்.

இந்துசமயக் கட்டுக்கோப்புக் கமைவான இந்து தியாகபீடம் அமைத்தலும், பரிபாலித் தலும், குருகுலத்தின் உயர்ந்த நிலைபான கருத்து.

நிபந்தனைகளற்ற ஆனால் கட்டுக்கோப் புள்' அமைந்த பல்வேறு நிதியுதவிகளைப் பல்வேறு நிறுவனங்களில் இருந்து பெறவும் வெளிநாட்டு நிறுவன ஆதரவைப் பெறவும், விரும்புகின்றது இக்குருகுலம்; குருகுலத் தின் நிதி நிர்வாகத்தையும், நிர்வாக ஒழுங்கு களையும் சீர்ப்படுத்த ஒரு நல்ல கந்தோர் நிறு வன அமைப்பை நிறுவியுள்ளது; இது மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

சத்தியம், அகிம்சை, எளிமை, இக்குரு குலத்தின் அடியூற்று, இக்குருகுலம் கரைச் சிச் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கி வருகிறது. இச்சங்கம் பதிவு செய் யப்பட்ட வரையறுக்கப்பட்ட சங்கம். இலங் கையின் தர்மச்சங்கமாய் உறுதிப்படுத்தப்பட் டது. அன்பளிப்புச் செய்யும் கொடையாள ரின் பணத்துக்கு வருமான வரிகூடத் தவிர்க்கப்பட்டுள்ளது.



வே. கதிரவேலு குருகுல நிர்வாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகுலத்தைத் தரிசித்தவர்கள் சம்வபத்திரட்டுப் புத்தகத்தில் எழுதியனவற்றுட் சில

தீனபந்து ஆச்சிரமம்.
வாலஜாபேட்டை
வடஆற்காடு ஜில்லா,
இந்தியா.

ஒரு ஏழை கல்வி கற்றுப் பெரியவனுகிப் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால் அவனுல் ஒரு பாரம்பரியமே ஏழ்மை, அறியாமைப் பேயினின்றும் காக்கப்படுகின்றது. பல ஏழ்மைச் சூழ்நிலையுடையவர்க்குக் கல்வி, உணவு, தொழில், உடை, ஆகிய தந்து காப்பதன் மூலம் தீயசக்தி உலகில் தோன்ருமல் இருக்கச் செய்யமுடியும். இந்தக் குருகுலம் இத்தகைய அரும்பணி செய்கிறது. பொது மக்களும் அரசாங்கமும் இதனுடன் ஒத்துழைத்து நடத்த உதவுவதன் மூலம் சமுதாயம் இனிய நன்மையான சூழ்நிலையைப் பெறும். என்று உறுதியாக அனுபவ மூலமாக உணர்ந்து அறிந்து சொல்கிறுன்.

வாழ்க இன்ப அன்பு,

உங்களன்புள்ள குழந்தை
(ஒப்பம்) பித்துக்குளி.

5. 7. 67.

All my best Wishes

ஆஜா தேவி, அரியநாயகம்.

30-6-1968

ஒரு சிறந்த நல்ல தொண்டு. சிறந்த முறையில் நடைபெற்று வருவதை வாழ்த்துகின்றோம்.

தெய்வசிகாமணி.
(குன்றக்குடி அடிகளார்)

## இரசிக சிகாமணி கனக செந்திநாதனது.

எனது பாடசாலை நண்பராகிய வே. கதிரவேலு என்ற இவர் வாரதாக் கல்வித் திட்டப் பயிற்சி பெறுகிறுர் என்று கேள்விப்பட்ட பொழுது அதனுல் ஈழத்துக்கு என்னநன்மை? என்று யோசித்தவன் நான்.

அவரது ஆற்றலும் படிப்பும் விவேகமும் தமிழ்த் துறையுட் புகுந்தால் ...... ? என்று யோசித்தேன் நான். ஆனுல் இன்று இந்தக் குருகுலத்தைப்பார்த்த பொழுது அவர் சரியான பாதையில் ஈழத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு வேண்டிய ஒரு பாதையில் காலடி எடுத்து வைத்து அமைதியான ஒரு மௌனப் புரட்சிசெய்து கொண்டிருக்கிறுர் என்பதை அறிந்து அளவிலா உவகை அடைந்தேன். " இராசரத்தினம் என்ற மகான் நாட்டிய பல மரங்களில் பூத்துக் காய்த்துப் பழம் தந்து கொண்டிருக்கிறது என்பது என் எண்ணம். அந்த மரத்தை நன்கு பேண உடன் அன்பர்களும் உதவுகிறுர்கள் என்பதில் மகிழ்ச்சி.


குருகுலம் சிறக்க எனது வாழ்த்துக்கள்,


அன்பன்.
கனக செந்திநாதன்.

31-5-81


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுலத்தில்
1985 ல்
உள்ள ஆண்களிற்
சிலர். >






குருகுலத்தில் ஆண்கள் 1984 ல்




சிறுமியர் கூட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1985ல் குருகுலத்திலுள்ள பெண்பிள்ளைகளிற் சிலர்.



1984ல் பெண்பிள்ளைகள்.



சிறுவர்கள்

நாடகத்தில் ஒரு காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரியினது.

குருகுலத்தை இன்று பார்வையிட்டேன். பல ஆண்டுகள் இப்பகுதியில் வசித்து வந்தும்கூட இதுவரை இங்கு வருகை தரவில்லையே என்ற கவலை பிறந்தது; இந்த நிலையத்தைப் பார்வையிட்ட பிறகே சமூகசேவையிற் பலர் ஈடுபாடு கொண்டுள்ளனர்; சிலர் அதிகம் பேசுவார்கள், ஆனால், எதையும் செய்பவர்கள் அல்ல, ஆனால் பலர் எவ்வளவோ செய்துவிட்டு எதையும் பேசாமல் இருக்கிறார்கள். அவர்கள் தம்பணியில் படும் கஷ்ட துன்பம் ஆகியவற்றை யாருக்குச் சொல்கிறார்கள், என்ற எண்ணம் பிறந்தது.

இந்நிலையத்துக்கு யாரும் எதையும் செய்யத்தேவையில்லை, சாதாரணமாக அரசாங்கம் கொடுக்கும் உதவிகளை மட்டும் பெற்றுக் கொடுத்தாற் போதும். மிகுதி வேலைகளை நிலையத்தவர்கள் பார்த்துக் கொள்வார்கள் இந் நிலையத்துக்கு வருவோரை நான் கேட்பது ஒன்றே ஒன்று. தங்களால் இயன்றதை ஒவ்வொரு துறையிலும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுங்கள். என்னைப் பொறுத்தவரையில் இப்பணியில் முழு ஈடுபாடுடையவனாகவே இனி இருப்பேன்.

(ஒப்பம்) வீ. ஆனந்தசங்கரி
5-8-1970. பா. உறுப்பினர்.

## இலங்கைப் பிரதேச அபிவிருத்தி உதவியாளர் வி. செ. சுவாமிநாதன் அவர்களது

உலகமே கைவிட்டு, வாழ்வே இல்லாமல் இருக்கக்கூடிய எதிர்கால சந்ததிக்கு இத்தகைய தூய்மையான நிலையங்கள் கண்கண்ட தெய்வங்கள். எல்லாத் துறையிலும் அறிவையூட்டி நல்ல உள்ளமும் உடலும் உள்ள ஒரு உலகத்தை சிருஷ்டிக்கத் துடிக்கும் இந்த நிலையத்துக்கு அள்ளிக் கொடுப்பதிலேதான் தர்மம் இந்த உலகத்தில் உயிரோடு இருக்கும்.

வாழ்க நிலையத்தின் இலட்சியங்கள்.

வி. சே. சுவாமிநாதன்.
1i-9-74. பிரதேச அபிவிருத்தி உதவியாளர்.

## பண்டிதர் சு. இராசையாவினது

பழமுதிர்சோலை யாழ்ப்பாணம்.

எமது குருநாதர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைப் பெரியாரின் கட்டளைப்படி இன்று இக் குருகுலத்தை இதன், நிர்வாகி திரு. வே. கதிரவேலு அவர்களுடன் தரிசித்தேன். இது இப்போது சிறிய வித்து ஆனால் வளர்ந்து வளர்ந்து உலகை மூடக்கூடிய விருட்சமாகவளரும் என்பதைக் கண்கூடாகக் கண்டேன். "வளரும் பிள்ளையை மண் விளையாட்டாற் தெரியும்" என்பது முதுமொழி.

முல்லையை மருதமாக்கி முழுமுதற் பொருளின் தோற்றம்
கல்வியிற் கண்டவாறு கணக்கிலர் அளவிற்றாகி
எல்லையில் உணவும் மற்றும் உடைகளும் தந்து நாளும்
பலவிதமாக ஓங்கிப் பயன்தர வேண்டும் நன்றே.
"வாழ்க குருகுலம் வாழிய இனிதே"

8-11-72. நல்லூர் ஆடியபாத வீதி, (ஒப்பம்) பண்டிதர். சு. இராசையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Even in the dark, your Centre is very impressive. I would like to have been here earlier to see your Sarvodhaya Village during the day.

Sgd. *Even Coxworth*
Oxfom, Canada
132, 10th St E, Saskatoon, Sask.

13.3.76

We have been travelling fro some time in search of ideas to help us build our own farm community in Canada. We found many constructive ideas during our stay in Gurugulam. We also found kindness and hospitality. The singing, the dancing and the dramas made us very happy. We enjoyed our visit to the school and the food here was most delicious We will always remember Gurukulam.

Sgd. *Patrick & Marilyn Mooney*
21-2201, 14 ave Regiha
Saska lohewar, Canada

13-3-76

**இசைப் பேரவைத் தலைவர்.**

இன்று குருகுலம் கலைநிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்புப் பெற்றேன், ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனத்தின், விஸ்வபாரதியின்சாயல் தோற்றங்களைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தேன். கலை, நடனம், நாடகம் சங்கீதமூலமே குருகுலம் இயங்கவேண்டும்.

வாழ்க குருகுலம்

(ஒப்பம்) P. சந்திரசேகரம்.
தலைவர் இசைப் பேரவை

3-5-78

I visited Gurugulam on the 20th as a representative of the Social and Economic Centre, 133, Kinsey Road' Colombo and my intention was to learn about the activities at Gurukulam and the aims for which the institution stands. I was very happy to see the efforts made by this movement to bring about a new form of village life in our Society based on Gandhiyan principles

I stayed till 21st evening and the long discussions held with the Administrator, the other members of the staff and also the trainees helped me to understand the approch of the Gandhiyan movement towards, Human development.


I am very grateful to the excellant hospitality shown. Having understood the difficulties faced by the management to run this institution, I will make the necessary recommendations to meet the needs.

I wish every success to these praiseworthy efforts.

Sgd. *Sarath Fernando*
Project Officer, (SEDEC)

21-9-78


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் பாடசாலையும் குழந்தைகளும்.



மாதிரிப் பாலர் பாடசாலை.



மாதிரிப் பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி.




மாதிரிப் பாலர் பாடசாலையும்,
குழந்தைகள் பராமரிப்பு நிலையமும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிராம ஊழியர்பயிற்சிபெறும் மாணவிகள்,
500 க்கு அதிகமானோர் பயிற்சிபெற்றுள்ளனர்,



மாணவிகள் நெசவுப்பயிற்சி பெறுகின்றனர்.



நெசவுசாலை.



அச்சக எழுத்து கோப்பாளர் பயிற்சி.



அச்சகப்பயிற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த . சிவசிதம்பரம் அவர்களது.

இன்று காலை இங்கிலையத்துக்கு எமது குடும்பத்தாருடன் வந்தேன். மட்டுநகரில் இருந்து பயிற்சி பெறும் இதாபிள்ளைகளுடன் கலந்துரையாடினேன், எல்லோரும் சந்தோஷமாக இருக்கின்றார்கள். தோட்டவேலை இன்னும் கூடுதலாக மேற்கொள்ளலாம் என்பது எமது ஆசை. குறித்த விஸ்தரிப்புக்கு ஏதேனும் என்னால் செய்யக்கூடிய ஒத்தாசைகளைச் செய்ய ஆயத்தமாக இருக்கின்றேன்.

(ஒப்பம்) கோ. சிவசிதம்பரம்.
10-2-79 பா. உ. வவுனியா

## வாடகைச் சபை அலுவலரது

இன்று குருகுலம் வந்தேன. அமைதியை, அன்பை, ஆதரவைத் தேடி அலையும் எவரும் இக் குருகுலத்திற்கு வாருங்கள் இங்கே இம்மூன்றையும் ஒருவரில் 'அப்புவில்' காணலாம். அவர் செய்துவரும் பெரும் தொண்டிற்கு இன்று தொடக்கம் நானும் உதவ எம்பெருமான் அருளட்டும்.

அதிகாரம் பெற்ற அலுவலர்
வாடகைச் சபை
22.4.74 யாழ்ப்பாணம்.

We were happy to meet you all in this place. The youth is the future of the Country and in this case I, as a female, am proud to see this female youth so concerned about the life of their fellow country (wo)men

Finishing with last word I spoke coming from my own (western) country I am jealous to see your spirit and motivation.

We wish you all the best in futuje

Sgd. *Maryke & Ron Rote*
9-6-79. *NOVIB, Holland.*

The spirit to Gandhiji is so important in these times of potential violence and the time Gandhiyam must be compeiled to take direct non-violent. action to stem the tide of violence· It is the "time" Gandhiyam who will preserve for all time non-violence peace loving and communal harmoney of the world.

Go well - Stay well and be a peace.

Sgd. *Cole O Dodge*.
OXFAM
July 1979 Madras, India.

## மந்திரி செள· தொண்டமான் அவர்களது

இன்றைய தினம் இந்தக் குருகுலத்துக்கு வருகைதந்து சின்னஞ் சிறார்கள் செய்யக்கூடிய பலவித கைப்பணிப் பொருட்களைப் பார்வையிட்டு அகமகிழ்ந்தேன். இந்தக் குருகுலத்தின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைக் கவனத்துக்கு எடுத்து ஆவன செய்வேன்

செள. தொண்டமான்.
30.10.79 கிராமிய கைத்தொழில் அமைச்சர்

## லண்டன முரசு சிறப்பாசிரியர் உயர் திரு. சி. ஞானசூரியன் அவர்களது.

"எனது வாழ்க்கையே எனது போதனையின் சாராம்சம்." என்ற காந்திஜீயின் வாக்கியத்தைச் செயலில் உருவாக்கிய பெருமை குருகுல ஸ்தாபனத்தைச் சாரும் என்பதை உறுதியாகக் கூறலாம். இந்த வகையில் சமய - சமுதாய சேவைக்குத் தமிழரிடையே ஒரு முற்போக்குப் பாதையை அமைத்து வழிகாட்டியாக விளங்கிவரும் குருகுலத்தின் மகத்தான தொண்டைப் பாராட்டுவதோடமையாது எம்மாலியன்ற உதவிகளை லண்டனிலிருந்தும் செய்வோம்.

சிறப்பாசிரியர் "லண்டன்முரசு"
இ. ஞானசூரியன்.
72, King Eclward Rd E 71, Lenddn

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum Shanti

I was very much impressed by the sincerity, simplicity and devotedness of Brother Appu and Mother, the teachers and the students of their selfless services and the lovefulness to each other and to others. My sincere thanks to the organisers for having made our stay a pleasant memorable. It makes me to come back again.

Aum Shanti

B. K Shivakanya

*ClO Branaa Kumaris,*
*26, Jamboolingam St.,*
*Nungambakkam,*
*Madras* - 600034. 18-09-81

## உலக இந்து மகாசபை இலங்கைக் கிளைத் தலைவர் திரு. யோகேந்திரா துரைச்சுவாமி அவர்களது.

இன்று உலக இந்து மகாசபை (விஸ்வ கிந்து பரிசத்) தலைவர் என்ற முறையில் எனது சக உறுப்பினர்களுடன் இந்தக் குருகுலத்துக்கு வந்து இங்கு நடைபெறும் பல்வேறு சமய சமூகப் பணிகளை நேரில் கண்டேன். குருகுலத்தின் தொண்டு போற்றத் தக்கது. இறைவன் சகல சித்திகளையும் அருள்வாராக.

யோகேந்திரா துரைச்சுவாமி.
தலைவர் உலக இந்துமகாசபை,
11.11.81 இலங்கைக் கிளை.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தமிழ்ப் பேராசிரியர் உயர் திரு த. திருநாவுக்கரசு அவர்களது.

நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்தக் குருகுலம் ஆற்றிவரும் அன்புப்பணி - அறப்பணி பலவாற்றாலும் பயன்தருவதாகும். தொண்டு நெறியின் ஒரு பகுதியாக இறைவழிபாடு - ஆன்ம சிந்தனையும் போற்றப்படுவது இந்தக் குருகுலத்தின் சிறப்பு இயல்பாகக் காணப்படுகிறது. வருங்காலக் குடிமக்களை நல்லவர்களாக - உத்தமர்களாக உருவாக்கும் பணியில் குருகுலத்தலைவரும் மற்றுமுள்ள உறுப்பினர்களும் முழுமனதாக ஈடுபட்டுள்ளமை போற்றத்தக்கதாகும். இத்தகைய புனிதமான குருகுலத்தினைக் காணவும், தங்கவும் நான் வாய்ப்புப் பெற்றதைப் பெருமைக்குரிய பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

இக்குருகுலத்தின் தொண்டு சிறக்க இறைவனை வேண்டி வணங்குகின்றேன்.


க. த. திருநாவுக்கரசு.
(தமிழ்ப் பேராசிரியர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)
-7-82. சென்னை. 113.

I was very pleased to come to Gurugulam and have an extensive interview withMr. Kathiravelu. He. his wife and his limited staff had done a lot of service with self sacrifice. They are training young children of different ages in the principle oi Sarvodayam as practised by Mahatma Gandhi.


I have also been round and seen the 50 acre site. His work needs encouragement and help so that it will develop and grow from strength to stregth.

Dr. P. Ragunathau
*242, Headstoue Lane,*
*N. Harrone, Middz.*
30-8-82 *England.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தையல் பயிற்சி.




பொம்மை தயாரித்தல்,



பாண் போரணை



மா பதனிடும் பயிற்சி



வெல்டிங் பயிற்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் பயிற்சி.



செங்கற்சூளை.



தச்சுப் பயிற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோர்வே அன்பர் திரு. அ. ஜேம்ஸ் அவர்களது.

காடாக இருந்த இடத்தைச் சோலையாக மாற்றி வருங்கால மக்களின் பாதையைச் சிறப்பாக அமைக்கும் பணியில், தன்னலமற்ற பணியை ஆற்றி வரும் இந்நிலையத்தை நாம் இன்று தரிசித்ததைப் பெரிய பாக்கியமாக எண்ணுகிறோம். தங்கள் பணி தொடர்ந்தும் திறம்படச் செயற்பட எல்லாம்வல்ல இறைவனை வேண்டிநிற்கிறோம்.

வணக்கம்.

**A. JAMES,**
*Ortuflaten* - 18
5033 *Fyllings Daen,*
*NORWAY.*
8.5.80

இங்ஙனம்
அ. ஜேம்ஸ்.

Visited and went round this Institution. I was highly impressed by the training and the service being rendered to young girls and children by this Institution.

R. Selvarajah
36, Jehen Blankhes,
9-7-80. Kualalampur, Malasia.

We are greatly Impressed by the self sacrifice and work being done at Gurugulam Ashram.

We would like to help as des as we can in publishing this amongest our community in U. S. A and also to find an outlet for their handicrafts.

A. Saravanaqavan.
6517, Wiunepeg Road,
Bethesda Md. 20034,
12th August 1980. USA,

I am extremely happy and proud to see the selfless work done. It goes with the ideals of Service of Rotary. It is the duty of every man in the locality to help such great cause.

S. KUMAR,
*P. B.No.* 400,
28, *August* 1980. *Trivandrum.*

Having heard abont this charitable Organisation only for tho last twelve months or so, Iwas keen to visit and see for myself, the place and its activities in action.

I am very pleased to see that so much of effort is put into the cause of running and maintaining a Saiva Institntion like this.

I am glad to be here today – only a few days after my pilgrimage to Saiva and other Hindu temples in Tamilnadu (S. India) – to wish every success in your divine mission.

I have no doubt that you will not face many obstacles to achieve your aims and I will keep in touch to note the progress made time to time and will also contribute whatever possible within my means to help you to move forward.

God bless you.

S. YOGANATHAN.
67. *Westweigh Candens,*
*EDGWARE. MIDDX. HA85RP*
*Jnuary,* 1981 *UK.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Visited Gurugulam today. No one can fail to be impressed by the self sacrificing work of Mr. Kathiravelu and his band of workers. The students who are being trained as teachers of Saivaism exhibit a high standard of excellence in their subjects and a descipline and methodical mode of life.

**P. Gananathapillai,**
*Co-ordinating Secretary, Hinduism.*
*Religious Unit*
*Ministy of Ebucation,*
*Colombo.*

4-4-83

# குருகுலம் தோன்றிய இடவிசேடம்

குருகுலத்துக்கு 50 ஏக்கர் காணியுண்டு 20ஏக்கர் தோட்டப்பயிர்ச் செய்கைக்குரியது 25ஏக்கர் வயல்நிலம் கிளிநொச்சிக் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து மேற்கே இரண்டரைமைல் தூரத்தில் உள்ளது. தோட்டச்செய்கைக்கு அருங்கோடையிலும் வற்றாத நீரூற்றுள்ள கிணறுகள் ஆக்கும் வசதிநிறைந்தது. இரணைமடுக் குளத்திலிருந்து வரும் பெரிய வாய்க்கால் அருகிற்சென்றுகொண்டிருக்கின்றது. வயல்நிலம் இதனால் நீர்ப்பாய்ச்சப்படும். கிளிநொச்சி உருத்திரபுரம் பஸ் போக்குவரத்துப்பாதையில் உள்ளது. மின்சாரம் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளது. அயலில் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்காகக் கிளிநொச்சி இந்துமகாவித்தியாலயம் உண்டு. ஆத்மிக அறிவை வளர்க்க மகாதேவ ஆச்சிரமம் அமைந்துள்ளது. காணியைச் சுற்றி மூன்றுதிசைகளிலும் பகிரங்கவீதிகள். சூழலில் நன்குவிருத்தியடைந்த ஜெயந்திநகர்க் குடியேற்றத்திட்டம். தபால்வசதி தந்திச்சேவை வைத்தியவசதிகள் நிறைந்த இடம் பல்வேறு கைத்தொழில்களையும் ஆக்கிக்கொள்ளக் கூடியமூலப்பொருள் பெறக்கூடியவசதிகள் நிறைந்திருப்பதுடன் நாமே உற்பத்திசெய்யவும் கூடிய வளமுள்ள நிலம் இது. இந்த இடத்தில் குருகுலம் தோன்றியதும் அதன் வளர்ச்சிக்கு இறைவனால் அளிக்கப்பட்ட பெரும் பேறென்றே கூற வேண்டும். எல்லாவித வசதிகளும் ஒரே சூழலில் இருக்கும் வசதி கூடிய இந்த இடம் இந்தத் தாபனத்துக்கென்றே இறையருளால் கிடைத்துள்ளது. வேறெங்குமே காண்பதரிது.

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உயர் திரு. ஜெயநாதன் அவர்களது.

சைவமும் தமிழும் வளர்ப்பதோடு வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டும் இச்சங்கத்தைப் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒழுங்குமுறையை அனுஷ்டித்துச் சிறுவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை வகுத்துக்கொடுக்கும் இச்சங்கத்தின் கருமங்களைப் போற்றுகிறேன்.


ஒப்பம் **ஜெயநாதன்.**
அரசாங்க அதிபர்
கிளிநொச்சி.

6-3-84.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதியோர்கள் - 1983.



குருகுலத்திலுள்ள முதியோர்கள்- 1985.







பாலர் விளையாட்டிடமும் விளையாட்டு உபகரணங்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மில்க்வைற் தொழிலதிபர் சிவதருமவள்ளல் க. கனகராசா அவர்கள் மரம்நாட்டல்.

அமரத்துவமடைந்த பிரதம நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்கள் ▷ தலைமையில் இந்துப் போதகர் பயிற்சிக் கருத்தரங்கு





அகதிகள் புனர்வாழ்வுக்கு உதவிய நோர்வே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்ற இருபது ஆண்டுகளில் குருகுல சாதனை.

1. அடர்ந்த காடாய்க் கிடந்த 50 ஏக்கர் காடு நாடாக்கப்பட்டு நெல் வயலாயும் தென்னை, மா பலாத் தோப்பாயும், மாறபலவித அமைப்புக்களுக்குரிய சோலைகளாக்கியும் உள்ளோம். இதன் தற்போதைய பெறுமதி குறைந்தது ரூ 12,00.000-00

2. ஆரம்பமுதல் (1964) வறிய குழந்தைகளின் வளர்ப்பில் ஈடுபட்டு அவர்களின் உணவுக்காக உடை - பிறவற்றுக்காகப் பல லட்சம் ரூபாவைச் செலவிட்டுள்ளதுடன் ஒரு நல்ல அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்க முயன்றுள்ளது.

3. தாய் தந்தையாற்றோர், இருவரில் ஒருவரற்றோர், இருவருமிருந்தும் அவர்கள் மறுமணம் செய்துள்ளதால் பாதிக்கப்பட்ட தாய் தந்தையர்களின் குழந்தைகள், வறிய குழந்தைகள், இருவரும் நோய்வாய்ப் பட்டமையால் வதங்கும் குழந்தைகள், ஒழுக்கமாய் வளர விரும்பும் குழந்தைகள் முதல் பல திறத்தாரும் இங்கு வாழ்ந்து படித்து முன்னேறியுள்ளார்கள். இவர்களிற் பலர் பட்டதாரிகளாய், ஆசிரியர்களாய் வங்கி உழியராய் இன்னும் பல தொழிலாற்றுபவர்களாய் சிறந்த விவசாயிகளாய் வாழ்ந்து வருகின்றனர்.

4. படித்து வேலையற்றிருக்க இளம் பெண்களுக்குப் பாலர் பாடசாலைப் பயிற்சியும் கிராம ஊழியப் பயிற்சியும் கொடுத்துக் கிராமங்கள் தோறும் ஊழியம் செய்கின்றார்கள். 500க்கு அதிகமானோர் இப்பயிற்சி (காந்தியப் பயிற்சி) பெற்றுள்ளார்கள். இவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் சேவையாற்றுகின்றனர்.

5. படித்த வாலிபர்களுக்கு விவசாயம், தச்சுவேலை, மேசன்வேலைப் பயிற்சிகள் அளித்துள்ளோம்

6. 24-2-64 தொடங்கி இன்றுவரை பாடசாலைக் கல்வியும் வாழ்வுக் கல்வியும் தொழிற் பயிற்சியும் பெற்றுப் பயனடைந்தோர் மிகப் பலர். தற்பொழுதும் 130 பேருளர்.

7. பல்வேறு கட்டிடங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. ரூபா 100,0000|- பெறுமானமானது.

8. தொழிற் கூடங்கள் பல அமைக்கப் பட்டுள்ளன.

9. மாதிரிப் பாலர் பாடசாலையும், பயிற்சிக் கூடமும் அமைக்கப் பட்டுள்ளது.

10. தற்காலிக மின்னிணைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

11. இந்துப் போதகர் பயிற்சிக் கல்லூரி- தற்காலிக இடத்தில் நடாத்தப் படுகின்றது.

12. சர்வசக்திபீடம்- மேருபீடம்- என்று அழைக்கப்படும் கோவில் ஒன்று தற்காலிக இடத்தில் அமைந்துள்ளது. நிரந்தர கட்டிடத்திற்கான அத்திவாரமிடப் பட்டுள்ளது.

13. இங்கு சேவித்துவரும் சர்வோதயக் குடில் அமைப்பு ரூபா 6,00000-00க்கு அதிகமாக இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தம் சொந்த உழைப்பில் இருந்து செல விட்டுக் குரு குலத்தை வளர்க்க முயன்றுள்ளது. முக்கியமாக ஒருகுடும்பம் தம்மை எல்லாவழியிலும் அர்ப்பணித்துள்ளது.

14. சூறவளி, பெருவெள்ளம் கடும்கோடை இவற்றால் பாதிக்கப் பட்டும் கஷ்டங்கள் துன்பங்களைப் பொறுப்பேற்றும் வளர்ந்துள்ளது. ஈடுசெய்ய முடியாத பல கஷ்டங்களை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1983 ல் ஏற்பட்ட பெருவெள்ளம் மிகுந்தபாதிப்பை ஏற்படுத்தியது. சூறவளிக் காற்றாலும் தாக்கப்பொற்றுள்ளது.

15. சமூக முன்னேற்றத்துக்கான பலதுறைகளிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றியது.

16. வன்செயலால் பாதிக்கப்பட்டுக் குடிபெயர்ந்தோருக்குப் பெரும் பணியாற்றியுள்ளது. யாழ் பாதிக்கப்பட்டோர் புனர்வாழ்வுக்கழக உதவியுடன் 300 குடும்பங்கள் குடியேற்ற உதவியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றுள்ள நிலை

1. இன்றுகல்லூரியில் படிக்கும் 125 மாணவ, மாணவியரும், முதியோரும் பிறருமாக என்றுமிருந்து கொண்டிருப்போர் 15 பேரும், இந்து போதகர் பயிற்சி மாணவர்கள் பதினைந்து பேரும், நடத்துனரும், உதவியாளரும், தொழிலாளருமாக இருபதுபேரும், தற்காலிகமாகத் தங்குவோரும் பிறருமாக 150 பேர் தங்குகின்றனர். இவர்களிற் பலர் கஷ்டப்பட்டு வாழ வசதிகள் குறைந்து வறுமையாலும் வேறுவசதியீனங்களாலும் தாக்கப் படுவோரே. இவர்களின் உணவுச் செலவுக்கு ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு ரூபா 1200-00 வேண்டும்.

2. இந்து போதகர் பயிற்சித் திட்டம் சென்ற ஐந்து ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. இவர்களின் மூன்றாண்டுப் பயிற்சி பூர்த்தியடைந்துள்ளதால் மற்றிரு வருடங்களிலும் செயல் முறைப்பயிற்சி பெறவேண்டியவர்கள். அப்பயிற்சிக்காகிய ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன, இவர்களுக்கு அரசாங்கம் ஆசிரியர் பதவியளிக்க முன்வந்தும் காலநிலை விபரீதத்தால் இதைச் சாதிக்க முடியவில்லை. தாமே தம்மில்தங்கி இந்து சமுதாயத்திற்கு உழைக்கும் போதகர்களாய் அமைந்து சேவையாற்ற இவர்களைப் பரிபாலிக்கும் அமைப்புள்ள, மற்றவர் மதிக்கத் தக்க சைவ மத்திய நிறுவனம் எம்மிடையே இதுவரை உருவாகவில்லை. இந்த நிறுவனத்தையமைக்கவும் அந்நிறுவனத்தில் இவர்கள் தகுதியான அங்கத்துவம் பெறவும் கூடிய முறையில் இவர்களுக்குப் பட்டமளிப்புச் செய்யப்படவில்லை. எமது இந்தச் சைவத் தியாகபீடம் உருவாவதற்கும் முழுநேர இந்து சேவையாளராய் மறுமலர்ச்சியடையவும் இவர்களின் எண்ணிக்கையும் தகுதியும் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. புதிய வகுப்புப் பயிற்சிக்கும் மாணவர்கள் தெரிவு பெற்றுள்ளனர். வகுப்பு நடக்கிறது. இதையும் காலநிலை தாக்குகின்றது.

ஆசிரியர்களிடையேயும், பட்டதாரிகளிடையேயும், பண்டிதர்களிடையேயும், தெரிவு செய்யப்பட்ட சிலருக்குக் குறுகிய காலப் பயிற்சியுமளித்து இவர்களின் தகுதியை விருத்தி செய்து போதகர்களாக்கவும் அவர்களின் அறிவைச் சமூதாயத்துக்குப் பயன்படுத்தவும் முயலவேண்டியுள்ளது.

3. இப்படிப்பயிற்சிபெற்ற போதகாசிரியர்கள் இந்து மதமாணவர் பயிலும் பாடசாலையில் குறைந்தது ஒருவராவது இருக்கவும், வருடந்தோறும் குறைந்தது 100 பேராவது அரசாங்கத்தால் சைவ ஆசிரியர்களாக நியமிக்கப்படும் வகையில் அரசாங்க அனுமதி பெறவும் முயலவேண்டும்

